தொகுதியைப் பொறுத்தவரையில், குறிஞ்சிப்பாடி நகரம் மற்றும் அதனைச் சுற்றி இருக்கக்கூடிய பகுதிகளிலும் கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்கள் அதிகம் பேர் இருக்கிறார்கள். அங்கிருக்கக்கூடிய ஏழையெளிய தொழிலாளர்கள் நலன் கருதி, இளைஞர்களுடைய நலன் கருதி, கடலூர் மாவட்டத்திற்கு ஒரு ஜவுளிப் பூங்காவை உருவாக்கித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே எடுத்துச்சொல்லி ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10—40

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜவுளிப் பூங்கா அமைப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது. இதற்குத் தேவையான நிதியை மத்திய அரசு 40 சதவிகிதம் அல்லது ரூ.40 கோடி; மாநில அரசு 9 சதவிகிதம் அல்லது ரூ.9 கோடி; ஆகமொத்தம் 49 சதவிகித நிதியுதவியை மத்திய, மாநில அரசுகள் தருவதற்குத் தயாராக இருக்கின்றன. அங்கே இருக்கின்ற தொழில்முனைவோர்கள் 51 சதவிகித நிதியை ஏற்பாடு செய்ய முன்வர வேண்டும். கடனாகவோ, வங்கிக் கடனாகவோ அல்லது அவர்களுடைய மூலதனமாகவோ கொடுக்க வேண்டும். அதற்கு முன்வருகிறபோது, மாவட்ட ஆட்சியருடைய பரிந்துரையைப் பெற்று அரசு தாராளமாக பரிவோடு அதைச் செய்து கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

15—

அவசர கால ஊர்தி மற்றும் கட்டடம்

***8661—திரு. சு. புகழேந்தி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் தொகுதி, கருங்குழி ஜி.ஜி. பேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அவசர கால ஊர்தி வழங்கவும், 10 படுக்கைகள் வசதி கொண்ட கட்டடம் கட்டவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி, ஜி.ஜி. பேட்டையில் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அவசர கால ஊர்தி வேண்டுமென்று சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றார். பொதுவாக 108 Ambulance–ஐப் பொறுத்தவரையில் தற்போது ஒரு மருத்துவமனைக்கு என்று நாம் ஒதுக்கீடு செய்வதில்லை. எந்த இடங்களிலே விபத்துகள் அதிகமாக ஏற்படக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்பதைக் கணக்கிட்டு, அந்த அழைப்புகளின் எண்ணிக்கைக்குத் தகுந்தவாறுதான் நாம் allot செய்திருக்கிறோம். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கக்கூடிய ஜி.ஜி. பேட்டையிலிருந்து 400 மீட்டர் தூரமுள்ள கருங்குழி பேரூராட்சியிலே ஏற்கெனவே ஒரு 108 ambulance வாகனம் நிறுத்தப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தாங்கள் கூடுதலாக 10 படுக்கைகள் வசதி கொண்ட கட்டடம் வேண்டுமென்று கேட்டுள்ளீர்கள். அது ஒரு நல்ல தரமான ஆரம்ப சுகாதார நிலையம். மாதத்திற்கு 16 பிரசவங்கள் நடைபெறக்கூடிய மருத்துவமனை என்ற காரணத்தினாலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட அந்தக் கூடுதல் கட்டடம் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி அவர்கள்.

திரு. சு. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நின்ற தேர்தல் அனைத்திலும் வென்ற தலைவர்; வாழ்க்கை மட்டும் போராட்டம் அல்ல; மரணத்திலும்கூட போராடி வெற்றி கண்ட தலைவர்; அண்ணாவின் இதயத்தை இரவலாகப்

2019 ஜூலை 2]

பெற்றிருக்கிற தலைவர் கலைஞர் அவர்கள் இருக்கின்ற திசை நோக்கி வணங்குகிறேன்.

வசிஷ்டர் வாயால் பிரம்மரிஷி பட்டத்தைப் பெற்றதைப்போல, அந்தத் தலைவர் வாயாலேயே உழைப்பு, உழைப்பு, உழைப்பு; அதற்கு இலக்கணம் இவர்தான் என்று அடையாளம் காட்டப்பட்ட இன்றைய எதிர்க்கட்சித் தலைவர், நாளைய தமிழகத்தின் முதல்வர், எங்கள் தளபதியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜி.ஜி. பேட்டை என்பது ஞானகிரீஸ்வரன் பேட்டை. அது ஏதோ குக்கிராமத்தில் இருக்கக்கூடிய ஊர் அல்ல. தேசிய நெடுஞ்சாலையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல கருங்குழிக்கு அருகிலேயே அமைந்திருக்கின்ற அந்த மருத்துவமனையைச் சுற்றி கிட்டத்தட்ட 58 குக்கிராமங்கள் அமைந்துள்ளன. குறிப்பாக கிளார் ஊராட்சி, அரையப்பாக்கம் ஊராட்சி, கீழவலம் ஊராட்சி, ஜானகிபுரம் ஊராட்சி, கள்ளபிரான்புரம், புதுப்பட்டு, முன்னித்திக்குப்பம், சூரை, அண்டவாக்கம், சாத்தவை போன்ற பல்வேறு பகுதிகளில் இருக்கக்கூடிய ஏழையெளிய மக்கள் சிகிச்சைக்காக தினசரி அந்த மருத்துவமனைக்கு வந்து செல்கிறார்கள். கடந்த ஜூன் மாதத்திலே மாத்திரம் 15 பிரசவங்கள் அந்த மருத்துவமனையில் நடைபெற்றிருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட இங்கே சொன்னார்கள். எனவே, கூடுதல் கட்டடங்களும், அந்த மருத்துவமனைக்குத் தேவையான உதவிகளையும் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு, விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல அது ஒரு நாளைக்கு 200 புற நோயாளிகள் வரக்கூடிய, நல்ல முறையிலே செயல்படக்கூடிய மருத்துவமனை. அதனால் அந்த மருத்துவமனையிலே உறுப்பினருடைய கோரிக்கைக்கு ஏற்ப, கூடுதல் கட்டடம் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி அவர்கள்.

திரு. சு. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மருத்துவமனை தேசிய நெடுஞ்சாலையில் இருக்கிறது. இன்றைக்கு பத்திரிகை, தொலைக்காட்சியை எடுத்துக்கொண்டால், மாமண்டூரிலேயிருந்து அச்சரப்பாக்கம்-தொழுப்பேடு வரை தினசரி இன்று ஒரு தகவல் போல விபத்துகள் நடைபெற்றுக் கொண்டேயிருக்கின்றன. அந்த மருத்துவமனையில் முழுநேர மருத்துவர் இதுவரை இல்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த மருத்துவமனைக்கு முழுநேர மருத்துவரை நியமிக்கும்படி தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–45

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக மருத்துவக் கல்லூரி; Primary Health Care; அதன்பிறகு Secondary Health Care; அதன்பிறகு Tertiary Health Care என்ற வகையிலே நாம் மருத்துவச் சேவையை தமிழ்நாட்டிலே வழங்கிக் கொண்டு வருகின்றோம். மாவட்ட தலைமை மருத்துவமனைகளை 24 மணிநேரமும் செயல்படக்கூடிய சிறப்பான மருத்துவமனைகளாக தமிழ்நாடு முழுவதும் உறுதிபடுத்தியிருக்கின்றோம். அதற்குப் பின்னர் தாலுகா மருத்துவமனைகளை 24 மணி நேரமும் செயல்படக்கூடிய அளவிற்கு இன்றைக்கு மருத்துவ சேவையை அதிகரித்திருக்கின்றோம். கிராமப்புற பகுதிகளில் ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு மருத்துவமனை என்ற முறையில் ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு மருத்துவமனையை 5 மருத்துவர்களுடன் 24 மணி நேரமும் செயல்படக்கூடிய வகையில் மருத்துவ சேவையை வழங்கியிருக்கின்றோம். ஆக, மீதியுள்ள இடங்களில், காலையிலிருந்து மாலைவரை புறநோயாளிகளைப் பார்க்கக்கூடிய மருத்துவமனைகளாகச் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல, எங்கெல்லாம் விபத்துகள் அதிகமாக நடக்கின்றனவோ அங்கெல்லாம் Accident Trauma Centres–ஐ நிறுவியுள்ளோம். எந்தெந்தப் பகுதிகளில் இன்னும் அதிக எண்ணிக்கையில்

2019 ஜூலை 2]

விபத்துகள் நடக்கின்றனவோ, அங்கு Trauma Stabilization Centres–*விபத்து காய சிகிச்சை நிலைப்படுத்தும் மையங்கள் என நாம் விபத்துகளின் எண்ணிக்கையினுடைய அடிப்படையில் தொடர்ந்து சேவையை அதிகரித்து வருகின்றோம். அந்த வகையில் அந்த மருத்துவமனை* on road *இருக்கின்ற காரணத்தினாலே, வருங்காலத்தில் நோயாளிகளின் எண்ணிக்கைக்கேற்ப மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை கருத்தில்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். இது* main question–*க்கு சம்பந்தப்பட்ட கேள்வியாக இல்லாவிட்டாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு பதில் சொல்வார்கள் என்ற நம்பிக்கையில் கேட்டுக்கொள்கிறேன். ஒரு தாலுகாவில் தாலுகா மருத்துவமனை இருக்க வேண்டுமென்பது அரசினுடைய கொள்கை. காட்பாடி தாலுகா ஆரம்பித்து நீண்ட நாட்கள் ஆகிவிட்டன. இன்னும் ஒரு தாலுகா மருத்துவமனை இல்லை. எனவே, அது ஆரம்பிக்கப்படுமா என்று முன்பு ஒரு முறை கேட்டேன். அது ஆரம்பிக்கப்படும் என்று சொன்னார்கள். இதுவரையிலே ஆரம்பிக்கப்படவில்லை. காட்பாடி தாலுகாவிற்கு ஒரு தாலுகா மருத்துவமனை இல்லை. எனவே, இந்தத் தருணத்தை நான் பயன்படுத்திக்கொண்டு அப்படியொரு மருத்துவமனையை அமைக்க அரசு முன்வருமா என கேட்டுக்கொள்கிறேன். அதை தாலுகாவினுடைய மையப் பகுதியாக இருக்கிற கே.வி. குப்பத்தில் அமைத்தால் சாலச் சிறந்ததாக இருக்கும். அதையும் இந்த அரசு கவனத்தில்கொள்ளுமா? இரண்டு அறிவிப்புகளும் அமைச்சர் அவர்களுடைய மானியத்திலே அறிவிப்பாக வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்பாடி தாலுகா மருத்துவமனை அமைப்பது குறித்து கடந்த கூட்டத் தொடரில் மாண்புமிகு*

எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் கேட்டு, மாண்புமிகு முதலமைச்சர் ஒப்புதல் வழங்கி, அதற்கான file is under circulation. அதற்குத் தேவையான கருத்துருக்கள் பெறப்பட்டு, அது உரிய நடவடிக்கையில் இருக்கிறது. விரைவிலே, நல்ல செய்தி அரசாணையாக வந்து சேரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ் அவர்கள்.

திரு. ஆர். கணேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் உதகை சட்டமன்றத் தொகுதியில் பட்டியல் இன மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் மற்றும் பழங்குடியினர்கள் வாழும் எமரால்டு பகுதிக்கு கடந்த கூட்டத் தொடரில் கேட்டமாதிரி, ரூ.18 கோடி நிதி ஒதுக்கப்பட்ட அந்த வேலை நடந்து கொண்டிருப்பதற்கு மகிழ்ச்சியையும் வாழ்த்துகளையும் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இதில் நான் என்ன சொல்கிறேன் என்றால், நீங்கள் அங்கு போட்டு கொடுத்துவிட்டீர்கள், அங்கு ஒன்றும் பிரச்சினை கிடையாது. இந்த season–ல் கிட்டத்தட்ட 3 இலட்சம் பேர் ஊட்டிக்கு வந்து செல்கின்றார்கள். இந்த season–ல் மட்டும் கிட்டத்தட்ட 40 பேர் ஊட்டி சுற்றுலாப் பயணிகள் 25 பேர் உட்பட தலையில் அடிபட்டு மலையிலிருந்து கீழே இறங்கி கோயம்புத்தூர் மருத்துவமனைக்கு வருவதற்கு முன்பாக மரணத்தை சந்திக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் ஆகிவிட்டது. கல்லட்டியில் 6 பேர் இறந்திருக்கிறார்கள். சுற்றுலாப் பயணிகள் நிறைய பேர் இறந்திருக்கிறார்கள். இப்போது மருத்துவமனையில் upgradation நடைபெற்று கொண்டிருக்கிறது. 250, 300 ஏக்கர் land, Hindustan Photo Films மூடப்பட்ட இடத்திலே நம்முடைய தமிழ்நாடு அரசினுடைய இடமே இருக்கிறது. அது தண்ணீர் வசதியுடன், டேங்க், quarters, E.B. line மற்றும் எல்லா lines வசதிகளோடும் இருக்கிறது. அங்கு தயவுசெய்து, ஒரு Multi Speciality Hospital உடன் ஒரு மருத்துவக் கல்லூரியை அமைத்துக் கொடுத்தீர்களென்றால் நிச்சயமாக அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு உபயோகமாக இருக்கும். இங்கிருக்கிற அத்தனை எம்.எல்.ஏ.–க்களும் அங்கு வந்து செல்கிறார்கள். இது உங்களுக்குத் தெரியும். எதிர்க்கட்சி, ஆளுங்கட்சி என்று நான் சொல்லவில்லை. எல்லா எம்.எல்.ஏ.–க்களும் வருகிறார்கள். ஊட்டியை ரசிக்க

வருகிறார்கள். அதற்கு 150 கோடி ரூபாய் செலவாகும். நீங்கள் என்னென்னவற்றிற்கோ செலவு செய்கிறீர்கள். எழுந்தவுடனே காலையில் செய்தித்தாளைப் பார்த்தால் சேலத்தில் பல திட்டங்களைப் போடுகிறீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொகுதியில் நிறைய திட்டங்கள் நடைபெறுகின்றன. நான் மேம்பாலம் கேட்கவில்லை. ஒரு மருத்துவமனை கட்டுவதற்கு தயவுகூர்ந்து நீங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் எடுத்துக்கூறி, ரூ.150 கோடி நிதி ஒதுக்கப்படும் என்ற ஓர் அறிவிப்பை வெளியிட்டால் நிச்சயமாக நீலகிரி மக்கள் உங்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறார்கள். உலகம் முழுவதிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளும் உங்களுக்கு கடமைப்பட்டவர்களாக இருப்பார்கள் என்பதை இந்தத் தருணத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–50

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர் அவர்கள் ரூ.18 கோடி நிதி ஒதுக்கியதற்கு நன்றி தெரிவித்ததற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நீலகிரி மாவட்டத்தை தன்னுடைய சொந்த மாவட்டமாக பாவித்தார்கள். அதனால்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் இருந்த காலத்திலேயே நோயாளிகளினுடைய எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்தபொழுதிலும் ஊட்டி மற்றும் குன்னூர் மருத்துவமனைகளுக்கு M.R.I. Scan, C.T. Scan உட்பட ஒரே நேரத்திலே 3 C.T. Scan இயந்திரங்களை வழங்கி, அதை மாண்புமிகு அம்மா அவர்களே திறந்து வைத்துள்ளார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் காலத்திலிருந்து இன்று வரை நீலகிரி மாவட்டத்து மலைவாழ் மக்கள் வாழ்வு வளம் பெற, மக்கள் நல்வாழ்வுத் துறை மட்டுமல்ல, எல்லா துறை சார்ந்த பணிகளுக்கும் அதிக முக்கியத்துவத்தை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தொடர்ந்து வழங்கி வருகிறது. தாங்கள் குறிப்பிட்டதுபோல, மலைப் பகுதிகளில் அரசினுடைய சேவையை உறுதிப்படுத்துவதற்கு நாம் தொடர்ந்து முயற்சி செய்துகொண்டிருக்கிறோம். நீங்கள் சொன்னதுபோல, நீலகிரி மாவட்டத்தில் Multi Speciality மருத்துவமனை அல்லது

மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஒன்றை அமைத்து மிகப் பெரிய அளவில் மருத்துவ சேவையை வழங்க வேண்டுமென்பது அரசினுடைய பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. தகுந்த நேரத்தில், அரசினுடைய நிதிநிலைமைக்கேற்ப விரைவில் அதற்குண்டான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மகிழ்வோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள்.*

டாக்டர் ஆர்.டி. அரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியின் மூலமாக தமிழ் மொழியை தலைநகராம் டெல்லியில் ஒலிக்க செய்த எங்கள் தலைவரை வணங்குகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சற்றேறக்குறைய 50 கிராமங்களை உள்ளடக்கிய செய்யூர் தாலுகா மருத்துவமனையானது போதிய கட்டடம் இல்லாமலும், போதிய மருத்துவர்கள் இல்லாத சூழ்நிலையிலும் உள்ளது. இதுகுறித்து பல்வேறு கோரிக்கைகள் வைத்தும் இந்த அரசு இன்னும் அந்தப் பகுதியிலே மருத்துவர்களை நியமனம் செய்யாமல் இருக்கிறது. அதேபோல, மருத்துவம் சார்ந்த உதவியாளர்கள் பணியிடங்களும் நிரப்பப்படாமல் இருக்கின்றன. கடப்பாக்கம் பகுதியிலே தரமுயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் போதிய நிலமிருந்தும், போதிய கட்டட வசதி இல்லாமல் இருக்கிறது. இப்பொழுது மருத்துவத் துறையானது 9–வது இடத்திற்குச் சென்றுள்ளது. இத்தகைய குறைகள் எல்லாம் அங்கு களைந்து, மருத்துவர்கள் இல்லாத குறையையும், கட்டடங்கள் இல்லாத குறையையும் நிவர்த்தி செய்ய இந்த அரசு முயற்சி செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைத் துறை அறிவித்தபடி இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடத்திலே தொடர்ந்து 4 முறை இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அப்பொழுது இந்த வெற்றி என்பது,*

2019 ஜுலை 2]

சட்டமன்றத்திலே பிரதிபலிக்கப்படுவதில்லை. இந்தியாவிலேயே தமிழ்நாடு சுகாதாரத் துறையில் முதல் மாநிலமாக விளங்கி வருகிறது. ஒவ்வோர் ஆண்டும் IMR— Infant Mortality Rate *குழந்தை இறப்பு விகிதத்தை தொடர்ந்து குறைத்துக் கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இது செய்தியாக்கப்படுவதில்லை.* MMR *என்று சொல்லக்கூடிய* Maternal Mortality Rate—*தாய்வழி இறப்பு விகிதத்தை நாம் தொடர்ந்து குறைத்துக் கொண்டிருக்கிறோம். அது சட்டமன்றத்திலே பிரதிபலிப்பதில்லை.* Institutional Delivery *உள்ளிட்ட பல்வேறு சாதனைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் தொடர்ந்து சத்தமில்லாமல் மக்கள் நல்வாழ்வுத் துறை செய்து கொண்டு வருகிறது.*

நேற்று மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள் சொன்ன கருத்துகளுக்கு நான் பதிலளித்திருக்கிறேன். NITI AAYOG–*ஐப் பொறுத்தவரையில்,* based on wrong data, *ஒரு தவறான எண்ணிக்கையின் அடிப்படையிலே அப்படி சொல்லப்பட்டிருக்கிறது. உங்களுடைய மாவட்டத்திலே 20 சதவிகிதம்* Delivery *வீட்டிலே நடக்கிறது என்பதை நீங்கள் ஒத்துக்கொண்டால்,* NITI AAYOG *சொல்வதை ஒத்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டிலே எந்த ஊரிலாவது, எந்தவொரு நகரத்திலாவது, எந்தவொரு மாநிலத்திலாவது மொத்தம் நடக்கின்ற பிரசவத்திலே 20 சதவிகித பிரசவங்கள் வீட்டில் நடக்கிறதென்பதை நீங்கள் ஒத்துக்கொண்டால்* NITI AAYOG *சொல்கிற 9–வது இடத்தை நான் ஒத்துக்கொள்கிறேன்.* Institutional delivery–*யை பொறுத்தவரையில், தமிழ்நாடு முழுவதும் 99 சதவிகித பிரசவங்கள் மருத்துவமனைகளில்தான் நடக்கின்றன. அதை* NITI AAYOG–*ல் தவறாகச் சொல்லியிருக்கிறார்கள். பிரசவத்தினுடைய எண்ணிக்கையை தவறாகச் சொல்லியிருக்கிறார்கள். இதுகுறித்து மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு நான் கடிதம் எழுதியிருக்கின்றேன். தலைமைச் செயலாளர் அவர்களும் கடிதம் எழுதியிருக்கிறார்கள்.* Objection *கொடுத்திருக்கிறோம்.* Revised data *பதிவு செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். இதுதான்* NITI AAYOG *குறித்த என்னுடைய பதில்.*

பொதுவாக மருத்துவர்கள் நியமனத்தைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டில் கடந்த 6, 7, 8 ஆண்டுகளில் தமிழகத்தினுடைய அனைத்துத் துறைகளுக்கும் சேர்த்து 27,000 பேருக்குமேல் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களை MRB—*மருத்துவப்*

பணியாளர் தேர்வு வாரியத்தின் மூலமாக transparent ஆக நியமனம் செய்திருக்கிறோம். தேர்தலுக்கு முன்னர்கூட M.B.B.S. படித்த 1,000 மருத்துவர்களுக்கு appointment order கொடுத்தோம். வரும் 5 ஆம் தேதி M.B.B.S. படித்த மருத்துவர்களுக்கு appointment order கொடுத்து, தொடர்ந்து நியமனம் செய்ய இருக்கிறோம். செவிலியரை நியமனம் செய்து கொண்டிருக்கிறோம். மருத்துவப் பணியாளர்களை நியமனம் செய்து கொண்டிருக்கிறோம். நோயாளிகளின் எண்ணிக்கை 3, 4 இலட்சம். ஒரு நாளைக்கு மொத்தம் 5–லிருந்து 6 இலட்சம் புறநோயாளிகள் தமிழகத்தில் மருத்துவமனைகளுக்கு வந்துகொண்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், தமிழ்நாட்டில்தான் சிறந்த மருத்துவ சேவை இருக்கிறது; இங்கு வந்தால்தான் உயிர் பிழைக்க முடியும் என்று நம்பி பக்கத்தில் இருக்கக்கூடிய ஆந்திர மாநிலத்திலிருந்து 30 சதவிகிதம் பேர் சிகிச்சைக்காக இங்கு வந்துகொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் எந்தக் கட்டணமும் இல்லாமல் உயர்தர சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன. சேவையும் தரமாக இருக்கிறது. மக்களிடம் எதிர்பார்ப்பும் இருக்கிறது. நீங்கள் சொல்கிற செய்யூர் போன்ற பகுதிகளில் கூடுதல் வசதிகளை செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறோம். தங்கள் பகுதி மருத்துவமனைக்கு என்ன தேவையோ அதை நிச்சயமாக ஆய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 16, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

16—

குளிர்பதனக் கிடங்கு

***35027—திரு. எ.பி. சக்திவேல்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—